**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.5** |
| **Name** | **:** | **திரு.தமிழ்மணி** |
| **Father's Name** | **:** | **கோவிந்தசாமி** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் அருங்குணம் கிராமத்தில் வசிக்கிறேன். தற்போது விவசாயம் செய்து வந்தேன். அ.சா.1 -ஐ என்னுடைய மச்சான். இறந்துபோன கண்ணன் எனக்கு அப்பா முறை. சலவாதி ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். செல்வராஜ் நிலத்திற்கும் ஏழுமலை நிலத்திற்கும் 300 அடி தூரத்தில் எனக்கு நிலம் உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.**

**எப்போது விசாரித்தார்கள் என்றால் மூன்றாம் நாள் செங்கல்பட்டில்**

மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார்கள். கண்ணன் சென்னை அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார்கள். செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி அம்மாள் ஆகியோர் செங்கல்பட்டு மருத்துவமனையில் இருந்தார்கள். அவர்கள் மூன்று பேரையும் பார்த்துவிட்டு சென்னை மருத்துவமனைக்கு கண்ணனை பார்க்க சென்றேன்.

லட்சுமி தேவி அம்மாளுக்கு வலது கையில் கட்டு போட்டு இருந்தது. செல்வராஜிற்கு இடது நடு விரல் மற்றும் ஆள்காட்டி விரலில் தையல் போடப்பட்டு இருந்தது. மண்டை முதுகு மற்றும் தோள்பட்டையில் அடிப்பட்டு இருந்தது. செல்வராஜின் மனைவிக்கு மண்டையில் கட்டு போடப்பட்டிருந்தது. தோள்பட்டையில் லேசாக அடிப்பட்டு இருந்தது. எப்படி அடிப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் பத்திரிக்கை எடுத்து வந்து எனக்கு கண்ணன் வீட்டில் கொடுத்தார். அதன்பிறகு கண்ணன் உடன் நான் சென்றேன்.

நான் கண்ணன், லட்சுமிதேவி ஆகியோர் செல்வராஜ் கழனிக்கு சென்றோம். 28.7.2011 அன்று மாலை 6 மணிக்கு சென்றோம். அங்கு எதிரிகள் அனைவரும் கும்பலாக இருந்தார்கள். நாங்கள் போகும்போதே செல்வராஜ் அங்கு இருந்தார். நாங்கள் சென்ற பிறகு தான் அவருடைய மனைவி வந்தார்.

மகாலிங்கம் தெரியுமா என்றால் அதற்குள் மகாலிங்கம் சென்றுவிட்டார். கிருஷ்ணன் என்பவர் கத்தியால் கண்ணனின் வலது பக்க தலையில் வெட்டிவிட்டார். பின்னர் இடது பக்க தலையில் வெட்டினார். செல்வராஜை மடக்கிக்கொண்டு இருக்கும்போது மாரிமுத்து இரும்பு பைபால் கண்ணனை தலையில் அடித்துவிட்டார். மாரிமுத்து கிருஷ்ணனிடம் இருந்த கத்தியை

பிடுங்கி வந்து சுழற்றி செல்வராஜை அடிக்க வந்தபோது நான் மடக்கியதில் கத்தி செல்வராஜின் இடது கையில் பட்டுவிட்டது. கத்தியை பிடுங்கி எறிந்தேன். பெண் எதிரிகள் கண்ணனையும், குமாரியையும், லட்சுமிதேவியையும் கொம்பால் அடித்தார்கள்.

பிறகு ஏழுமலை கடைசியாக வந்து கொம்பால் எல்லாரையும் அடித்தார். அதில் கண்ணன், செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர்களுக்கு அடிப்பட்டுவிட்டது. எதிரிகள் ஆம்புலன்சில் சென்றுவிட்டார்கள். அடிப்பட்ட கண்ணனை கட்டையால் கட்டி நானும் சத்தியவாடி கந்த நாயுடுவும் ரோட்டிற்கு அழைத்து வந்தோம். முருகன் ஆட்டோவில் ஏற்றிவிட்டோம். ஆட்டோ மாயனுக்கு சொந்தமானது. கண்ணனை ஆட்டோவில் ஏற்றிவிட்ட பிறகு மற்ற அடிப்பட்ட மூவரும் ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டார்கள். அதன்பிறகு 3ஆம் நாள் தான் செங்கல்பட்டிற்கு போய் பார்த்தது.

சென்னை அரசு மருத்துவமனையில் கண்ணனை போய் பார்த்தபோது அவர் எதுவும் பேசவில்லை. ஒரு வாரத்தில் கண்ணன் இறந்துவிட்டார். எதிரிகளுக்கும் அ.சா.1- குடும்பத்தினருக்கும் ரொம்ப காலமாக நில தகராறு. எதிரிகள் தரப்பினரும், அ.சா.1 தரப்பினரும் எனக்கு மச்சான் உறவுமுறை தான்.

சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தி இரும்பு பைப் மற்றும் கொம்புகளை பார்த்தால் அடையாளம் தெரியும். நான் தான் தெள்ளார் காவல்நிலையத்தில் கொண்டு போய் சேர்த்தேன். நீதிமன்றத்தில் உள்ளது தான் அந்த கத்தி, இரும்பு பைப் மற்றும் கொம்புகள். <u>கத்தி சான்று பொருள் 1</u>. <u>இரும்பு பைப் சான்று பொருள் 2</u>. <u>கொம்புகள் எண்ணிக்கை 6 சான்று பொருள் 3</u>.

**<u>1,2 மற்றும்  4 முதல் 7 எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**ஆறு கொம்புகளை நான் தான் காவல்நிலையத்தில் கொண்டு போய் கொடுத்தேன் என்றால் சரி தான். எத்தனை நாள் பொறுத்து ஆயுதங்களை காவல்நிலையத்தில் கொண்டு போய் கொடுத்தேன் என்றால் ஒரு வாரம் கழித்து. ஆயுதங்களை ஒப்படைக்கும்போது தான்  போலிசார் என்னை தெள்ளார் காவல்நிலையத்தினர் விசாரித்தார்கள் என்றால்  அப்போது தான் என்னை விசாரித்தார்கள்.**

**யார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் என்னை விசாரித்த போலிஸ் அதிகாரியின் பதவி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது மார்வாடி சாலையில் எனக்கு நிலம் மற்றும் வீடு  மச்சான் நிலத்தில் இருந்து 300 அடி தொலைவில் இருப்பதாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன்.**

**போலிசார் விசாரித்தபோது அருங்குணம் பொன்னியம்மன் கோயில் தெருவில் குடும்பத்துடன் வசிப்பதாக சொன்னேனா என்றால் சொன்னேன். இன்று தான் நீதிமன்றத்தில் முதல்முறையாக மார்வாடி சாலையில் மச்சான் நிலத்தில் இருந்து 300 அடி தொலைவில் நிலமும் வீடு இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரி தான்.**

**அ.சா.1செல்வராஜின் தங்கையை நான் திருமணம் செய்துக்கொண்டுள்ளேன் என்றால் சரி தான். அ.சா.1 செல்வராஜின் மகளை நான் என் மகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரி தான். கண்ணன் வீட்டு அலுவலுக்கு பத்திரிக்கை கொடுப்பதற்காக அ.சா.1 வீட்டிற்கு செல்லும்போது நான் கண்ணன் உடன் சென்ற விவரத்தை போலிசார்**

விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் உடன் சென்ற விவரத்தை போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் தான் சொல்கிறேன் என்றால் போலிசார் என்னை அதுகுறித்து கேட்கவில்லை. இங்கு கேட்டதால் சொல்கிறேன்.

போலிசார் என்னை விசாரித்தபோது செல்வராஜ் குடும்பத்தினர் எதிரிகள் உழுந்து போட்டதற்கு மேல் ஏர் ஓட்டுவதற்கு சென்றபோது நானும் சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் பத்திரிக்கை கொடுத்துவிட்டு வரும்போது கூச்சல் கேட்டதால் தான் அங்கு சென்றோம். அடிப்பட்ட நபர்களை ஆட்டோவில் ஏற்றிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரி தான். மருத்துவமனைக்கு உடன் செல்லவில்லை என்றால் சரி தான்.

நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அடிப்பட்ட கண்ணனை நானும் கந்தசாமி நாயுடுவும் கட்டையில் கட்டி ரோட்டிற்கு கொண்டு வந்த சங்கதியை போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் இருக்கும்போதே அடிப்பட்ட எதிரிகளை 108 ஆம்புலன்சில் அழைத்துச் சென்றார்கள் என்றால் ஆம்புலன்சில் சென்றது தெரியும். அடிப்பட்டது தெரியாது.

நான் போவதற்கு முன்பே மகாலிங்கம் சென்றுவிட்டு இருந்தாரா என்றால் அவர் அப்போதே போய்விட்டார். எதிரி கிருஷ்ணன் சென்னை மருந்து கம்பெனியில் வேலை பார்த்து சென்னையிலேயே வசித்து வருகிறார் என்றால் சரி தான். கிருஷ்ணனுக்கும் மாரிமுத்துவுக்கும் நிலம் பங்கிடப்பட்டு விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அப்போது நிலம் பங்கிடவில்லை. பங்கிடப்பட்ட நிலத்தை கிருஷ்ணன் பங்கை மாரிமுத்து தான் பயிரிட்டு

கொடுத்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

இருதரப்பினருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் நிலப்பிரச்சனை குறுக்கே வேண்டும், நெடுக்கே வேண்டும் என்ற நிலப்பிரச்சனை. குறுக்கே நெடுக்கே பற்றி எனக்கு தெரியாது. ஆனால் 40 வருடமாக நிலப்பிரச்சனை. கிழக்கு மேற்காக தான் பாகம் உள்ளது. பங்கு பிரிக்கும்போது கிழக்கு மேற்காக தான் அனைவருக்கும் பிரிக்கப்பட்டது. ஆனால் எதிரிகள் நெடுக்கே ஓட்டிவிட்டார்கள்.

பட்டா அவரவர் பெயரில் வந்துவிட்டது என்றால் பட்டா வந்துவிட்டது. எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. பட்டா படி தான் அவரவர்கள் அனுபவத்து வருகிறார்கள் என்றால்  கிழக்கு மேற்காக தான் அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள். கிழக்கு மேற்காக யாரும் அனுபவித்துவரவில்லை என்றாலும், பட்டா படி தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், செல்வராஜ் என்னுடைய மச்சான் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஆயுதங்களை கொண்டு போய் கொடுத்தபோது போலிசார் என்னை விசாரித்தபிறகு அதன்பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரி தான். ஆயுதங்களை ஒப்படைக்கும்போது மகசர் மாதிரி எழுதி போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். சான்று பொருள் -1 கத்தி புத்தம் புதிதாக உள்ளது என்றால் இந்த கத்தி தான் நான் கொடுத்தது.

நீதிமன்றத்தில் உள்ள கொம்பானது சுள்ளி வகையை சேர்ந்தது என்றால் பத்து வருடமாக இருப்பதால் இப்படி தான் இருக்கும். நீதிமன்றத்தில் உள்ள

ஆயுதங்கள் சாதாரணமாக கிடைக்கக்கூடியவை என்றால் எப்படி இந்த வழக்கிற்கு வந்தது என்று சாட்சி சாட்சியமளிக்கிறார். நான் என் மச்சானுக்காக இவ்வழக்கில் ஆயுதங்களை கடையில் வாங்கி சென்றும் கொண்டு சென்றும் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் கன்னியம்மாள், ராதா, மாரிமுத்து, தனலட்சுமி ஆகியோர்களுக்கு காயம்பட்டதை நான் பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை. செல்வராஜ் அடியாட்களை அழைத்துச் சென்று எதிரிகளை தாக்கினார்கள் என்றாலும், அவ்வாறு தாக்கும்போது தான் கண்ணனுக்கும், செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் ஜோடிக்கப்பட்டது.

செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர் மீது வழக்கு கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்களா என்றால் கைது செய்யப்பட்டார்கள். சாட்சிகளை ஜாமீன் எடுக்க நான் சென்றேன் என்றால் சரி தான். செல்வராஜ் வகையறா எதிரிகளை தாக்கிவிட்டு எதிரிகள் மீது பழியை போட்டுவிட்டார்கள் என்றால் அப்படி இருக்கட்டும். அதனால் என்ன.

1ம் எதிரி கிருஷ்ணன் கண்ணனை கத்தியால் தாக்கியதாக சொல்வதும், மாரிமுத்து செல்வராஜின் தலை மற்றும் கைகளில் வெட்டியதாக சொல்வதும், பெண் சாட்சிகளை பெண் எதிரிகள் தாக்கியதாக சொல்வதும், அதை நான் நேரில் பார்த்ததாக சொல்வதும், கண்ணன் உடன் சென்றதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் மச்சானுக்காக தயாரிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்ததாக சொல்வது பொய் என்றாலும் நான் எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.